www.Padasalai.Net www.CBSEtips.in

V11T

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி | பொதுத்தமிழ் | மதிப்பெண்கள்: 50

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** **8×1=8**

1) கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல்கனிமங்கள் - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட
ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால்
ஈ) காலத்தால் - சாகாத

2) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

3) மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

4) பிழையான தொடரைக் கண்டறிக.
அ) பதநீரில் இருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகள் ஆகும்.
இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உள்ளது.
ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

5) காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

6) பகுபத உறுப்புகளில் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம்
ஈ) பகுதி, விகுதி

7) உலக சிட்டுக்குருவிகள் நாள்
அ) ஜூன் 5 ஆ) ஏப்ரல் 22 இ) மார்ச் 20 ஈ) மார்ச் 22

8) ஒப்புரவு என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வம் உடையது

பகுதி - II

பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×2=6**

9) இனம் மொழி குறித்த ரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
10) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
11) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?
12) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

13) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
14) கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
15) பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது ஏன்?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

16) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

17) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
உலை, உளை, உழை

18) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

19) விகுதிகள் எவற்றை உணர்த்தும்?

## பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×4=4**

20) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

21) தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

பிரிவு - 2

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×4=4**

22) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

23) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

பிரிவு - 3

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×4=4**

24) **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக:**
"மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு வெள்ளியோடம் போல வரும்
வெண்ணிலாவே!
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே! கூகை ஆந்தைபோல் நீயும்
வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே! பந்தடிப்போம் உன்னை என்று
வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!"
- **கவிமணி**

25) வேற்றுமை அணி **(அல்லது)** சொற்பொருள் பின்வருநிலை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **2×6=12**

26) அ) அடக்கம் உடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக. **(அல்லது)**

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

27) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **1×4=4**

28) "ஆக்கியோன் பெயரே" எனத் தொடங்கும் நன்னூல் பாயிரம் பாடல்.

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com